# காயத்ரி மந்திரம்

ॐ भूर् भुवः स्वः तत् सवितुर्वरेण्यं

भर्गो देवस्य धीमहि धियो यो नः प्रचोदयात्॥

oṃ bhūr bhuvaḥ svaḥ tat saviturvareṇyaṃ

bhargo devasya dhīmahi dhiyo yo naḥ pracodayāt.

**ஓம்**

**பூர் புவ: ஸ்வ:**

**தத் சவிதுர்வரேண்யம்**

**பர்கோ தேவஸ்ய தீமஹி**

**தியோ யோ ந: ப்ரசோதயாத் ||**

மேற்கொண்ட இந்த காயத்திரி மந்திரம் மகரிஷி விஸ்வாமித்திரர் அவர்களால் அருளப்பட்டது. இதை தினந்தோறும் சொல்பவர்களுக்கு அறிவு பிரகாசிக்கும். காலையில் எழுந்து, ஆசமனம், சந்தியா வந்தனம் செய்து விட்டு, காயத்திரி மந்திரத்தை ஜபித்தால் தான் நம் அன்றாடைய பொழுது சிறப்பாக விளங்கி நமக்கு நல்ல பல பயன் அளிக்கும் என நமது ஆசாரியர்களும், இறைவன் தொண்டாற்றி மகிழும் மகான்களும் நமக்கு போதிக்கின்றனர்.

இந்த ஸ்ரீ காயத்ரி மந்திரமானது கிருஷ்ண யசுர் வேதத்திலும், சுக்கில யசுர் வேதத்திலும், சாம வேதத்திலும், பிருஹதாரண்யக உபநிடதங்களிலும் சொல்லப்பட்டுள்ளது.

"வேத சாஸ்திரங்களில் நான் காயத்ரீயாக இருக்கிறேன்" என்று பகவத்கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

இந்த காயத்ரி மந்திரத்திரத்திற்கு மேலான மந்திரம் உலகில் கிடையாது. வேத மந்திரங்களின் சாரமாக விளங்குவது காயத்ரி மந்திரம். மந்திரங்களிலெல்லாம் ஒப்புயர்வற்றது காயத்ரியே. மேலும், காயத்ரி மந்திரத்திற்கு சாவித்ரி என்றும், சரஸ்வதி

என்றும் பெயர்கள் உண்டு. இந்த மந்திரம் காலையில் காயத்ரிக்காகவும், நடுப்பகலில் சாவித்ரிக்காகவும், மாலையில் சந்தியாவந்தனத்தில் சரஸ்வதிக்காகவும் ஜபிக்கப்படுகிறது.

காயத்ரி மந்திரம் என்பது சூரிய வழிபாட்டிற்கு உரியது என்பதாகவே பலரும் நினைக்கின்றார்கள். ஆனால், உண்மையில், "யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ, அந்த தூய அறிவாகிய கடவுளின் மேலான ஒளியை தியானிப்போமாக" என்பது இதன் பொருள்.

பொதுவாக, ஒரு பலகையில் அமர்ந்துக் கொண்டு, நிமிர்ந்து உட்கார்ந்து, காலையில் கிழக்கு முகமாகவும், நண்பகலில் வடக்கு அல்லது கிழக்கு முகமாகவும், மாலையில் மேற்கு முகமாகவும் நோக்கி இந்த மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

ஸ்ரீ காயத்ரி மந்திரம் உச்சரிக்கும் முறையை பார்போமா பின் வருமாறு:

இந்த மந்திரத்தில் ஓம் என்ற பிரணவமும், பிறகு மூன்று வியாஹ்ருதிகளும் பிறகு மூன்று பாதங்களும் காயத்ரி மந்திரதில் உள்ளது.

இதை ஒரே மூச்சில் சொல்லாமல் ஓம் என்ற பிரணவத்திலும், இரண்டாவது வியாஹ்ருதிகளிலும், மூன்றாவது தத்ஸவிதுர்வரேண்யம் என்ற முதல் பாதத்திலும், நான்காவது பர்கோ தேவஸ்ய தீமஹி என்ற இரண்டாவது பாதத்திலும், ஐந்தாவது தியோ யோ ந; ப்ரசோதயாத் என்ற மூன்றாம் பாதத்திலும் நிறுத்தி சொல்ல வேண்டும்.

ஓம் தத் ஸத்!